முயற்சியில் ஈடுபடுவதற்குத் தடையாக இருக்கிறது. அதோடு வேப்ப எண்ணெய் என்பது உணவு எண்ணெயாக இல்லாத காரணத்தினால், அதை அதிகமாகப் பயன்படுத்தக் கூடிய நிலைமையில் இல்லை. அவைகளைப் பது னிட்டு, அவைகளுக்கு ஆகின்ற செலவுகளையும் அதனால் கிடைக்கக் கூடிய ஆதாயத்தையும் கணக்கிட்டுப் பார்க்கின்றபோது, ஆதாயம் குறைவாக இருக்கிறதென்று சொல்கின்ற நிலைமை இருக்கிறது. என்றாலும் இவைகள் எல்லாவற்றையும் கருத்தில் எடுத்துக்கொண்டு வேப்ப மரத்தை அதிகமாக வளர்ப்பதற்குரிய செயல் திட்டத்தை அந்தப் பல்கலைக் கழகம் ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

திரு. க. அருணாசலம்: தலைவர் அவர்களே, வேப்ப எண்ணெய் உணவு எண்ணெயாகப் பயன்படுவதில்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார் எண்ணெயாகப் பயன்படுவதில்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். லக்னோவில் இருக்கிற பொட்டானிகல் கார்டன் ஆராய்ச்சி நிலையத்திலே ஆராய்ச்சி பண்ணி, அதிலே இருக்கிற கசப்பைத் தனியாக எடுத்துவிட்டால், உணவாகவும் பயன்படுத்தலாம், பயன்படுத்துகிறார்கள் என்று அவர்கள் சொன்னார்கள். அதோடுகூட பாரம்பரையாக நம்முடைய நாட்டிலே பலர் அதை உணவாகவும் உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இது பற்றியும் தொடர்ந்து ஆராய்ச்சி நடத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, வேப்ப எண்ணெயில் இருக்கிற கசப்பை எடுத்து அதை உணவு எண்ணெயாகப் பயன்படுத்துவதை விட, நேரிடையாகவே உணவு எண்ணெயாகப் பயன்படுத்துவதற்குரிய எண்ணெய்கள் இருக்கின்றன. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிற கருத்துக்கள் எல்லாம் பல்கலைக் கழகத்தினுடைய ஆராய்ச்சிக்கு அனுப்பப்படுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

Parthenium

*92 *Q.*—THIRU S. J. SADIQ PASHA: Will the Hon. the Minister for Agriculture be pleased to state:

(a) whether it is a fact that the Tamil Nadu Agricultural University has identified Parthenium as a useful green manure and that it increases the paddy yield; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) ஆம்.

(இ) பார்த்தீனியத்தை நெற்பயிருக்கு பசுந்தாளுரமாக அளித்ததில் கிடைத்த ஆராய்ச்சி முடிவுகள்.

(யூரியாவுடன் ஒப்புநோக்கு.)

எண்.	விபரம்.	விளைச்சல் எக்டருக்கு டன்னில்
1.	தழைச்சத்து எதுவும் அளிக்காத நெற்பயிரின் மகசூல்.	4.4
2.	யூரியா மூலம் தழைச்சத்து 50 கிலோ எக்டருக்கு அளித்ததின் மகசூல்.	5.5
3.	பார்த்தீனியம் மூலம் 50 கிலோ எக்டருக்கு	6.3
4.	யூரியா மூலம் தழைச்சத்து 100 கிலோ	5.9
5.	பார்த்தீனியம் மூலம் தழைச்சத்து 100 கிலோ	5.6
6.	பார்த்தீனியம் மூலம் தழைச்சத்து அடியுரமாக 50 கிலோவும், யூரியா மூலம் தழைச்சத்து 50 கிலோ மேலுரமாகவும் அளித்ததில் மகசூல்.	5.8

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, பார்த்தீனியம் நச்சுத் தன்மை உள்ளதென்று சொல்கிறார்கள். இப்போது வேளாண்மைப் பல்கலைக் கழகம் அதைப் பயனுள்ள வகையிலே பயன்படுத்த முடியுமென்று கருத்து தெரிவித்திருக்கிறார்கள். அரசாங்கம் முன்வந்து, இந்தப் பல்கலைக் கழகத்தினுடைய முடிவை எற்றுக்கொண்டு, குறிப்பிட்ட பகுதிகளில் நெல் விளைச்சலை அதிகப்படுத்துவதற்காக இந்தத் திட்டத்தைப் பரவலாக நிறை வேற்ற முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்,

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1984 மார்ச் 14]

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, ஆராய்ச்சி முடிவு பற்றி கோ. 43 நெற் பயிருக்கு சம்பாப் பருவத்தில் இதைப் பயன் படுத்தலாம் என்ற வகையிலே கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதைச் சாண எரிவாயு சாதனத்திலும் பயன்படுத்தலாம், நார்களைத் தனியாகப் பிரித்து எடுக்கலாம். அட்டை தயாரிக்கலாம், என்றெல்லாம் ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன. ஆகவே உரிய வகையிலே இதைப் பயன்படுத்து வதற்கு அரசு செயல் திட்டத்தை மேற்கொள்ளும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவர் அவர்களே, இந்தப் பார்த் தினியம் நச்சுச் செடி என்று நகரங்களிலே, பல இடங்களிலே, கோவை போன்ற இடங்களிலே வந்ததாக மக்கள் பீதி அடைந்திருக்கிறார்கள். அதனாலே பயனுடையது என்று கருதுகிறபோது, ஒரு பெரிய திட்டத்தின் மூலமாக அனைத்துச் செடிகளையும் அப்புறப்படுத்துகிற முயற்சியை அரசு விரைவில் மேற்கொள்ளுமா ?

(முற்பகல் 9-40)

மாண்மிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதை அப்புறபபடுத்தி பயனற்றதாக ஆக்குவதைவிட, அதையும் ஒரு உரமாகப் பயன்படுத்தலாமே என்பதுதான் அரசினுடைய கருத்து.

செவிலியர் பயிற்சி மாணவி மரணம்.

*93 வினா—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதில ளிக்க வேண்டுகிறேன் :

(அ) சென்னை அரசினர் பொது மருத்துவமனையுடன் இணைந்த செவிலியர் மாணவியர் விடுதியில் தங்கியிருந்த, பயிற்சி பெற்று வந்த மாணவி யர்களில் எவரேனும் 1983-ஆம் ஆண்டு ஆகஸ்ட்-செப்டம்பர் திங்களில் இறந்து போனார்கள் என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்குரிய காரணம் யாது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(இ) எமிலி பெர்னான்டஸ் என்ற இரண்டாம் ஆண்டு செவிலியர் பயிற்சி மாணவி ஒருவர் உடல் நலக்குறைவு காரணமாக 1—9—1983 அன்று காலை 8.30 மணிக்கு சென்னை அரசு பொது மருத்துவ மனையில் கால மானார்.